மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

அசல் வழக்கு எண்.24 / 2015

2021ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் 1869ம் ஆண்டின் சாட்சிய சட்ட விதிகளின்படி, திரு.M.N. செந்தில்குமார், M.L., மாவட்ட நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : லோகநாதன் | **தகப்பனார் பெயர்** | : கோவிந்தசாமி |
| **கிராமம்** | : நாகப்பட்டினம் | **தாலுக்கா** | : நாகப்பட்டினம் |
| **வயது** | : 67 | **தொழில்** | : நகைக்கடையில் வேலை |
| **ஜாதி** | : -- | **மதம்** | : -- |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதியை எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் 1995ம் ஆண்டுமுதல் தெரியும். பிரதிவாதிகளை நான் எத்தனை முறை பார்த்துள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி தனலட்சுமியை பார்த்துள்ளேன், அவர் வீட்டிற்கு 2 முறை சென்றுள்ளேன். அவருடைய விலாசம் என்னவென்றால் பெருமாள்கோவில் மேலவீதி ஆகும். வாதி சொல்லி பணம் கேட்க நான் அவ்வாறு 1ம் பிரதிவாதி வீட்டிற்கு சென்றேனா என்றால் இல்லை, வாதியோடுதான் அவ்வாறு 1ம் பிரதிவாதி வீட்டிற்கு சென்றேன். அவ்வாறு வாதி என்னை 1ம் பிரதிவாதி வீட்டிற்கு அழைத்துசென்றதற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. எவ்வளவு ரூபாய் கொடுக்கவேண்டும் என்றும் வாதி, 1ம் பிரதிவாதியை கேட்டார் என்றால் தொகை குறிப்பிட்டு கேட்கவில்லை, கொடுக்க வேண்டிய பணம் வேண்டுமென்று கேட்டார். 1ம் பிரதிவாதியின் குடும்பத்தாரை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரிந்து வாதி, 1ம் பிரதிவாதியிடம் ஆவணம் ஏதேனும் படித்துகாண்பித்தாரா என்றால் இல்லை. எனக்கு தெரிந்து வாதி, 1ம் பிரதிவாதியிடம் கணக்கு ஏதேனும் காண்பித்துள்ளாரா என்றால் இல்லை. நான் சாட்சிக்கையொப்பம் செய்துள்ள பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியமா என்றால் தெரியும். அந்த பத்திரத்தில் என்ன சொல்லபட்டுள்ளது என்றால் மொத்தமாக ரூபாய்.8,00,000/- கடன் பெற்றுள்ளதாக எழுதப்பட்டுள்ளது. அந்த தொகையை எவ்வாறு திருப்பி செலுத்த வேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது என்றால் வட்டியோடு சேர்த்து 4 ஆண்டுகளில் திருப்பி செலுத்த

வேண்டுமென்றும், அவ்வாறு கொடுக்க தவறினால் சொத்தின் மதிப்பில் அந்த தொகைகள் போக மீதி தொகையை கொடுத்து கிரயம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. சாட்சிக்கையொப்பம் செய்த தேதியில் நான் எத்தனை மணிக்கு வாதி கடைக்கு சென்றேன் என்றால் காலை சுமார் 11 மணிக்கு சென்றேன். நான் அவ்வாறு அன்றைய தேதியில் வாதியின் கடைக்கு ஏதேச்சையாக சென்றேனா என்றால் ஆமாம். அதுசமயம் கடையில் யார் இருந்தார்கள் என்றால் 1ம் பிரதிவாதியும், அவரது கணவரும் இருந்தார்கள். அவர்களை தவிர வேறு யாரேனும் கடையில் இருந்தார்களா என்றால் கடையில் வேலை செய்யும் ஒரு பெண் மட்டும் இருந்தார். ஏற்கனவே அவ்வாறு சாட்சிக்கையொப்பம் செய்ய வேண்டுமென்று என்னிடம் வாதி சொல்லியிருந்தாரா என்றால் இல்லை. சாட்சிக்கையொப்பம் செய்தவுடன் நான் என் கடைக்கு வந்துவிட்டேனா என்றால் ஆமாம். அதுசமயம் அந்த கடைக்கு வேறு யாரேனும் வந்தார்களா என்றால் மற்றொரு சாட்சிக்கையொப்பம் செய்தவர் வந்தார். அந்த மற்றொரு சாட்சியான குணசேகரன் நான் அவ்வாறு வாதியின் கடைக்கு சென்றபோது இருந்தாரா என்றால் இல்லை, அதன்பிறகுதான் வந்தார். நான் அவ்வாறு வாதியின் கடைக்கு சென்றபோது வா.சா.ஆ.1 பத்திரம் யார் கையில் இருந்தது என்றால், 1ம் பிரதிவாதியிடமிருந்து வாதி பெற்று என்னை கையொப்பம் செய்ய சொன்னார். நான் வா.சா.ஆ.1ல் கையொப்பம் செய்தபோது அதில் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் இருந்ததா என்றால் இருந்தது. வாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் அவருக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை.

மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

அசல் வழக்கு எண்.24 / 2015

2021ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் 1869ம் ஆண்டின் சாட்சிய சட்ட விதிகளின்படி, திரு.M.N. செந்தில்குமார், M.L., மாவட்ட நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

Deposition of Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குணசேகரன் | தகப்பனார் பெயர் | : வேதையன் |
| கிராமம் | : நாகப்பட்டினம் | தாலுக்கா | : நாகப்பட்டினம் |
| வயது | : 55 | தொழில் | : நகை வேலை |
| ஜாதி | : -- | மதம் | : -- |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி எனக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் சுமார் 20 ஆண்டுகளாக பழக்கம். 1ம் பிரதிவாதி குடும்பத்தாரை எனக்கு நன்றாக தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். 1ம் பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவரது குழந்தைகள் என்ன செய்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 தேதி அன்று நான் ஏதேச்சையாக வாதியின் கடைக்கு சென்றேனா என்றால் ஆமாம். அன்றைய தேதியில் நான் எதற்காக வாதியின் கடைக்கு சென்றேன் என்றால் நகை வாங்க சென்றேன். அவ்வாறு நகை வாங்கினேனா என்றால் வாங்கினேன். அவ்வாறு நகை வாங்கியதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. என்ன ஆவணத்தில் நான் அன்றைய தினம் கையொப்பம் செய்தேன் என்றால் கடன் பற்று கிரயசாசனம் உடன்படிக்கை என்ற ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். அந்த ஆவணத்தை நான் படித்துப்பார்த்தேனா என்றால் ஆமாம். அவ்வாறுதான் அந்த ஆவணத்தில் கடன் பற்று கிரயசாசனம் உடன்படிக்கை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். வாதி அந்த ஆவணத்தை யாருக்கேனும் படித்து காண்பிக்க சொன்னாரா என்றால் இல்லை. நானாக அந்த ஆவணத்தை படித்து பார்த்ததற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. நான் வாதியின் கடைக்கு சென்றபோது அங்கு யார் இருந்தார்கள் என்றால் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் ஆகியோர் இருந்தார்கள். அவர்களை தவிர வேறு யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. நான் அவ்வாறு வாதியின் கடைக்கு சென்ற போது

வா.சா.ஆ.1 பத்திரம் யார் கையில் இருந்தது என்றால் அதை 1ம் பிரதிவாதி வாதியிடம் கொடுத்தார். நான் சென்றவுடன் வாதி அந்த பத்திரத்தை என்னிடம் கொடுத்து கையொப்பம் செய்ய சொன்னாரா என்றால் ஆமாம். நான் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்தபோது 1ம் பிரதிவாதி அங்கு இருந்தார் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியை பார்த்ததில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதால் அவரை பார்த்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வெற்றுத்தாளில் கையொப்பம் செய்ததை வைத்து நான், வாதி மற்றும் லோகநாதன் ஆகியோர் மோசடியாக வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை.